DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 286/2024** |
| Deposition of Witness for | : PW 13 |
| Name | : திருமதி.பிரபா (சார்புஆய்வாளர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th November 2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த அன்பழகன் தற்போது படுத்த படுக்கையாக இருந்து வருகிறார். அதனால் நான் வழக்கு ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். சங்கரன்கோவில் நகர காவல்நிலையக்குற்ற எண்.379/2015 வழக்குகோப்பினை முதல்விசாரணை செய்த சூர்யநாராயணன் 10.07.2015ம் தேதி அதிகாலை 1.45 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் சங்கர், கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் இரண்டாக உடைந்த தலைக்கவசம் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட தலைக்கவசத்தை படிவம்-91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். அந்த படிவம் -91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**இரண்டு துண்டாக உடைந்த நிலையில் உள்ள தலைக்கவசம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அத்துடன் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் அந்த வழக்கு கோப்பினை காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காயம்பட்ட ஜீவராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை அரசு மருத்துவர் ஜெஸ்லின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்று பெற்றுள்ளார். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது 30.09.2015ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் அதிவேகமாக சென்றுகொண்டிருக்கும்போது சாலை ஓரத்தில் நின்று இருநபர்கள் பேசிக்கொண்டிருப்பது வாகனத்தில் செல்பவருக்கு கேட்குமா என்றால் அது பேசிக்கொண்டிருக்கும் நபர்களின் குரல் மற்றும் கேட்பவரின் செவித்திறனை சார்ந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இரவு நேரங்களில் பொதுமக்கள் அதிகமாக இருப்பதில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், சங்கரன்கோவில் கோமதியம்மன் கோவில் வெளிக்காவல்நிலையத்திற்கும் 100 மீ தூரம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபிறகு அ.சா.1 யை மருத்துவமனைக்கு யார் எந்த வாகனத்தில் அழைத்து சென்றனர் என வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்கும். அய்யப்பன் என்பவர் தனது இருசக்கரவாகனத்தில் அ.சா.1 யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் சம்பவமானது சங்கரன்கோவில் வடக்குரத வீதிக்கு அருகில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்படி விபரம் பொய்யாக இருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது அவருடன் யார் இருந்தார் என்றால் அவருடைய மைத்துனர் அய்யப்பன் உடன் இருந்தார். அ.சா.1 போலீசார் அவரிடம் பதிவுசெய்த புகார் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டுள்ளாரா என்றால் கையொப்பம் இட்டுள்ளார். அ.சா.1 அளித்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில் அவரது கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

சம்பவத்தை நேரில் கண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் அ.சா.1ன் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரி சம்பவத்தின்போது ஓட்டிசென்ற இருசக்கரவாகனத்தின் விபரங்கள் வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் பல வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் வேலை பார்ப்பவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ள நாள் மற்றும் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**